552

# சமூக சேவைக்குழு ஆண்டறிக்கை

## 2019-2020

2019-2020 ஆம் கல்வியாண்டில் சமூக சேவைக்குழுவின் பொறுப்பாசிரியராக தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் ஆர். இளவரசி மற்றும் வேதியியல் இரண்டாமாண்டு மாணவி V. வினிதா என்ற மாணவியைச் செயலாளராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இச்சங்கத்தில் மூன்றாமாண்டு மாணவிகள் 128 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இச்சங்கம் 15.08.2019 சுதந்திர தினத்தன்று கல்லூரி மாணவிகளுக்கும் பேராசிரிய பெருமக்களுக்கும் இனிப்புகள் வழங்கி கொண்டாடியது. இச்சங்கத்தின் சார்பாக 06.09.2019 அன்று இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து "ஆளுமைத்திறன் மேம்பாடு" குறித்தக் கருத்தரங்கம் நடத்தியது. இக்கருத்தரங்கில் "ஏன் முடியாது" என்ற தலைப்பில் மாயவரம் JCI தலைவர் திரு B. பாலன் MBA அவர்களும், தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி சமூகப் பணித்துறைத் தலைவர் திருமதி M. சோபியா MSW அவர்கள் பெண்மையும் சவால்களும் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள்.

09.09.2019 அன்று மயிலாடுதுறை JCI யுடன் இணைந்து "பெண்களும் மாதவிடாய் பிரச்சனைகளும்" குறித்து விழிப்புணர்வு கூட்டம் நடத்தியது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை JCI தலைவர் திரு P. சரவணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். முனைவர் ஆர். இளவரசி "பெண்களும் மாதவிடாய் பிரச்சனைகளும்" குறித்து விழிப்புணர்வு உரையாற்றினார். மாணவிகளுக்கு Stanitary Napkin வழங்கப்பட்டன.

21.09.2019 அன்று உலக அமைதி தினத்தை முன்னிட்டு "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற பொருளில் மயிலாடுதுறை மத்திய அரிமா ஷைன் சங்கத்துடன் இணைந்து ஓவியப்போட்டியை நடத்தியது.

முதலாமாண்டு வேதியியல் துறை மாணவி S. வினிதா முதலிடத்தையும், இரண்டாமாண்டு செயல்முறைத் தமிழ் மாணவி K. பிவித்ரா இரண்டாமிடத்தையும் இரண்டாமாண்டு கணிதம் மாணவி S. யோகேஸ்வரி மூன்றாமிடத்தையும் பெற்றனர். வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

21.01.2020 அன்று "சமூக கட்டமைப்பில் ஊடகத்தின் பங்களிப்பு" என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி நடத்தியது. இப்போட்டியில் உயிர்வேதியியல் துறை. முதுஅறிவியல் முதலாமாண்டு மாணவி R. மோனிஷா முதலிடத்தையும், முதலாமாண்டு கணிதத்துறை மாணவி V. முத்துசெல்வி இரண்டாமிடத்தையும், விலங்கியல் துறை முதலாமாண்டு மாணவி G. பரணிகா மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

22.01.2020 அன்று இணைய பயன்பாட்டின் நன்மைகளும் தீமைகளும் என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி நடத்தியது. இப்போட்டியில் முதுகலை தமிழ் முதலாமாண்டு மாணவி சி. திவ்யா முதலிடத்தையும், இரண்டாமாண்டு கணிதத்துறை மாணவி S. யோகேஸ்வரி